Registered as a Newspaper in Ceylon
10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

நீடித்த பாவனைக்கு
சொனென் ஷீன் சொனென் ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 22 ஆம் நாள் துல்க பிறை 1 (5-3 65) வெள்ளிக்கிழமை இதழ் 25

யாழ்ப்பாணம்

# ரிமாண்ட் சிறையில் இடநெருக்கடி

## 36 பேர் மேலதிகமாக இருப்பதின் விளைவு

## மொத்தம் 344 கைதிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

**64 பேருக்கு மட்டும் இடவசதியுள்ள யாழ்ப்பாணம் ரிமாண்ட் சிறையில், இன்று 100 பேர்வரை இருப்பதால் இடநெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த நூறுபேருடன் சேர்த்து, யாழ்ப்பாணம் சிறையில் கடுங்காவல் கைதிகளும், சாதாரணக் கைதிகளும் மொத்தம் 344 பேர் இருக்கிறார்கள்.**

யாழ்ப்பாணம் ரிமாண்ட் சிறையில் குறிக்கப்பட்ட அளவுக்கு மேல் அதிகப்படியான ஆட்கள் வருவது இது முதல் தடவையல்ல எனக் கூறப்படுகிறது.

200 வருடத்துக்கு மேல் பழமை வாய்ந்த யாழ்ப்பாணம் போர்த்துக்கீசிய கோட்டையில், பாதிப் பகுதி சிறைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமார் 130 அதிகாரிகளும், ஊழியர்களும் இதில் கடமையாற்றி வருகிறார்கள். மிகப் பலம் வாய்ந்த இக்கோட்டைக்குள்ளேயே சிறை உத்தியோகஸ்தர்களின் வீடுகளும், அசைஸ் விசாரணையின் போது நீதிபதி ன் தங்கும் வாசஸ்தலமும் இருக்கின்றன.

இலங்கையில் மொத்தம் 11 சிறைகளும், 2 சிறுவர் சீர்திருத்த பாடசாலைகளும் இருப்பதாயும், வெலிக்கடை, மகாரை, கண்டி ஆகிய சிறைகளுக்கு அடுத்து யாழ்ப்பாணம் சிறைதான் நாட்டின் 4-வது பெரிய சிறை என்றும் கூறப்படுகிறது.

முதல் முறையாக 6 மாதங்களுக்கு குறைவாக தண்டனை பெற்ற உள்ளூர் கைதிகள் அந்தந்த சிறையில் வைக்கப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம், கண்டி ஆகிய சிறைகளில் பலமுறை தண்டிக்கப்பட்டவர்கள் வைக்கப்படுகிறார்கள் என்றும், யாழ்ப்பாணம் சிறையில் வைக்கப்படும் இத்தகைய கைதிகளின் அதிகபட்சத் தண்டனை 4 வருடக்கடுங்காவல் என்றும், சிற்சில சமயங்களில் விசேஷ வைத்தியக் காரணங்களுக்காக ஆயுள் கைதிகளும் இங்கு கொண்டுவரப்படுவதுண்டு என்றும், 20 வருட தண்டனை பெற்ற கைதிகள் சிலர் தற்போது யாழ்ப்பாணம் சிறையில் இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

கைதிகளில் சைவ உணவுக்காரர்களும் இருப்பதால் சைவ உணவு, மாமிச உணவு இரண்டும் தனியாகக் கொடுக்கப்படுகின்றன. மற்றப்படி சகல கைதிகளுக்கும் கொடுக்கப்படும் உணவின் தரம் ஓரே மாதிரியானது என்றும், வித்தியாசம் கிடையாது என்றும் தெரிகிறது.

காலையில் ஒரு நபருக்கு 6 அவுன்ஸ் பாண், சம்பல், தேநீர் வழங்கப்படுவதாயும், பகல் 11-30-க்கு மத்தியான உணவும், மாலை 5 மணிக்கு இராச்சாப்பாடு, 4 அவுன்ஸ் பாண் 3 கறிகளுடன் வழங்கப்படுவதாயும், இரவு 7 மணிக்கு ஒரு பால் இல்லாத் தேநீர் வழங்கப்படுவதாயும் கூறப்படுகிறது.

## 'தங்களது வருகை மேலும் கசப்பைவளர்க்கும்'

### நிதிமந்திரிக்கு அரசாங்க எழுதுவினைஞர் கடிதம்

பம்பலப்பிட்டி, வியா.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவரது உத்தேச யாழ்ப்பாண விஜயத்தைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்து இவ்வித விஜயம் தமிழ்பேசும் அரசாங்க ஊழியரிடையே மேலும் மனக்கசப்பை ஏற்படுத்துமெனச் சங்கம் கருதுவதாகவும் தெரிவித்துள்ளது.

நிதிமந்திரிக்கு சங்கத் தலைவர் திரு. சி. கோஷேஸ்வரன் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

அரசாங்கத்தின் மிகவும் பாரபட்சமான கொள்கையால் தமிழ்மக்களும் குறிப்பாகத் தமிழ் அரசாங்க ஊழியரும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் தாங்கள் மந்திரிப் பதவி ஏற்று அரசாங்கசேவைத் தலைமை பீடத்தில் அமர்ந்தபோதும் தமிழ் அரசாங்கசேவை ஊழியரின் கஷ்டங்கள் நிவிர்த்திசெய்யப்படவில்லை,

இவ்வித நிலையில், தங்களது யாழ்ப்பாண விஜயம் பொது மக்களின் சிறப்பான வரவேற்பைப் பெறுமோவெனக் கூற முடியாது. தமிழ் அரசாங்க சேவை ஊழியர் தங்களைத் திறந்த மனதோடு மகிழ்ச்சியுடன் வரவேற்கமுடியாத நிலையிலிருப்பார்கள் எனவும் மிக்க கவலையுடன் தெரிவிக்கின்றோம். யாழ்ப்பாணப் புதிய ரயில்வேநிலையம், யாழ்ப்பாணப் புதிய தபாற்கந்தோர் கட்டடம் ஆகியவை எந்த மந்திரிகளும் கலந்துகொள்ளாது திறந்துவைக்கப்பட்டன. இதேபோன்று இப்போதுள்ள தேர்தல் சூழ்நிலையை முன்னிட்டும் புதிய கச்சேரிக் கட்டடத் திறப்பு விழாவும் இடம்பெறச்செய்வது நல்லதாக இருக்குமென நாம் கருதுகிறோம்.

வடபகுதி அசைஸ்

## முகமாலைக்கு இன்று கோர்ட்டார் விஜயம் செய்வர்

யாழ்ப்பாணம், வெள்ளி விசாரணை நடைபெறும்.

முகமாலை கொலை, கொலை முயற்சி வழக்கில் சம்பவம் நடந்த இடத்தை நேரில் பார்வையிடும் பொருட்டு இன்று காலை 7-45 மணிக்கு நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா, முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சில்வா, எதிரிதரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், ஜூரிசபையினர் மற்றும் நீதிமன்ற உத்தியோகஸ்தர்கள் விஜயம்செய்வார்கள்.

நேற்றுக் காலை இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் மூன்றாவது தினமாக எடுத்துக்கொள்ளப்பட்டபோது டாக்டர் கல்லியா, சப் இன்ஸ்பெக்டர் அட்டிகலே, கான்ஸ்டபிள் செனரத் பண்டாரா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

முகமாலையில் சம்பவம் நடந்த இடத்தை நேரில் பார்வையிட்டபின் தொடர்ந்து வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில்

இவ்வழக்கில் 1963ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாந் தேதி சின்னத்தம்பி சின்னக்குட்டி, சின்னத்தம்பி கணபதி ஆகியோர் ஆறுமுகம் என்பவரை கொலைசெய்ததாகவும், முதலாம் எதிரி நாகமுத்துவை கொலைசெய்ய முயற்சித்ததாகவும் மூன்றாம் எதிரி த. காசிப்பிள்ளையைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

### மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி ரூ.205 உதவி

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்குப் பணமாகவும், பொருளாகவும் 26,790 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது.

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர்கள் நிவாரண நிதிக்கு 205 ரூபா சேகரித்து வழங்கியுள்ளனர்.

தமிழ்நாடு

## தமிழில் அரசாங்க நடவடிக்கை

### படிப்படியாக அமுலாகும்

சென்னை, மார்ச் 4

தமிழ்நாட்டில் அரசாங்க அலுவலகத்தின் பல பிரிவுகளிலும் படிப்படியாகத் தமிழைப் பிரயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாய் முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர்.

முதலில் ஜில்லா நிலவரை இது முற்றிலும் அமுல்நடத்தப்படுமென அவர் கூறினார்.

## கச்சேரி கட்டிடதிறப்பு விழா ஒத்திவைப்பு?

### வேலைகள் பூர்த்தியாகவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கச்சேரிக் கட்டடம் உத்தேசிக்கப்பட்டிருந்தபடி இமமாதம் நடுப்பகுதியில் திறக்கப்படமாட்டாதெனத் தெரியவருகிறது.

இப்புதிய கட்டடவேலைகள் இன்னும் பூர்த்தியடையாததாலேயே இவ்விதம் உத்தேசிக்கப்பட்டபடி திறக்கப்பட முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்புதிய கட்டடத்தை நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா திறந்துவைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

### புதிய சாதனம்!

மூனிச், மார்ச் 4

புதிதாகத் தயாரிக்கப்படும் 'ஹெலிகாப்டர்' விமானங்களைச் சோதனை செய்வதற்காக நூதனமான பிரமாண்டமான சாதனம் ஒன்றை மூனிச்சில் மேற்கு ஜெர்மன் விமானக் கம்பெனி ஒன்று நிறுவியிருக்கிறது. இதில் சுழலும் இறகுகள் மூன்று உள்ளன, இறகுகள் ஒவ்வொன்றும் 45 அடி நீளமும் ஏழரை அடி அகலமும் உள்ளன. இதன் உதவியைக் கொண்டு புதிய ஹெலிகாப்டர்களின் இறகுகளைச் சோதனை செய்கிறார்கள். இதச் சோதனைமூலம் மில்லிமீட்டர் துல்லியமாகத் திறனை அளக்க முடிகிறது.

### மணிவாக்கு

கலைமகள் இ... அகங்காரத்தையும் ஆசையையும் கொன்று, அவை திரும்பி வராதே படிக்கொன்று விடு. அப்பொழுதுதான் உனக்கு க்ஷேமம்.

— சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna. Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 22 வ. (5-3-65)


## வம்சாவளிப் பிரஜைகளின் இன்னல்கள்

இலங்கையிலே பரம்பரையாக வாழ்பவர்களும் சிறப்பாக தமிழரும் முஸ்லிம்களும் தாங்கள் வம்சாவளிப்பிரஜை என்பதை சட்டப்படி ருசுப்படுத்த முடியாமல் பலபல இன்னல்களுக்கும் உட்பட்டு வருகின்றனர். பாஸ்போர்ட் எடுப்பது உத்தியோகத்துக்கு மனுச் செய்வது, சொத்துக்களை வாங்குவது விற்பது, பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது முதலிய எல்லாக் காரியங்களுக்கும் இன்று பிரஜா உரிமைப் பத்திரமோ அல்லது வேறு அத்தாட்சிகளோ கேட்கப்படுகின்றன.

பதிவுப் பிரஜையாயின் உடன் அவர் தமது பதிவுப் பத்திரத்தை கலபமாகக்காட்டி விடலாம். ஆனால் இங்கு வழி வழியாக வாழ்பவர்கள், இப்போதுள்ள பிரஜா உரிமைச் சட்டப்படி தங்களது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் மட்டுமன்றி, தங்கள் தந்தை அல்லது பாட்டன் பூட்டன் இங்கு பிறந்ததாக அத்தாட்சிப் படுத்த வேண்டியிருக்கின்றது. இந்த அத்தாட்சிகள் கிடைக்காமல் இலங்கை வம்சாவளிப் பிரஜைகள் படும் கஷ்டங்கள் கொஞ்சமன்று. இவ்விஷயமாகப் பிரதமருக்குப் பல புகார்கள் சென்றன. இதைப்பற்றி விசாரித்து இவர்களது கஷ்டங்களைக் குறைக்கும்படியான யோசனை கூற நியமிக்கப்பட்ட விசேஷக் கமிட்டியின் அறிக்கை இப்போது வெளியாகியுள்ளது. இதிலடங்கிய பல யோசனைகளையும் அரசாங்கம் உடன் அமுலுக்குக் கொண்டு வந்தாலும் சம்பந்தப்பட்ட மக்களின் கஷ்டங்கள் பூரணமாகத் தீருவது சந்தேகமே.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திலே மக்களுக்கான அடிப்படை உரிமைகள் சேர்க்கப்படவில்லை. மற்ற நாகரீக நாடுகளிலெல்லாம், ஒருவர் ஒரு நாட்டில் பிறந்தாலோ அல்லது சில குறிப்பிட்ட வருடங்கள் வசித்தாலோ அவர் அந்நாட்டின் பிரஜையாகலாம், ஆனால் இலங்கையிலோ பிரஜா உரிமைச்சட்டம் வேண்டுமென்றே அதிக சிக்கலாகவும் கடுமையாகவும் செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னையை முன்னிட்டுத்தான் இச்சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளதென்பது பகிரங்க ரகசியம். இப்பிரச்னையை சமூகமாகத்தீர்க்க இருநாடுகளுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதால், இங்கு வம்சாவளிப் பிரஜைகளுக்கான கெடுபிடிகளை இனி வெகுவாகத் தளர்த்தலாமென்று இக்கமிட்டி சுட்டிக்காட்டுகின்றது. ஆனாலும் இலங்கை பிரஜா உரிமைச் சட்டத்தை, அடிப்படை மனித உரிமைகளுக்கிணங்க மற்ற நாகரீக நாடுகளில் உள்ளதுபோல் திருத்தும்போதுதான் இக்கஷ்டங்கள் உண்மையில் தீரமுடியும்.

மாவட்ட பிரஜாஉரிமைச் சபைகளை நியமிக்க வேண்டுமென்றும், பிரஜாஉரிமைமறுக்கப்பட்டவர்கள் அச்சபைக்கு அப்பீல் செய்து கொள்ளலாமென்றும், பின்னர் அச்சபைகளை ஒழித்து, விசாரணைச் சபைகளை ஏற்படுத்தலாமென்றும் அது செய்யும் முடிவுகள்மீது மாவட்ட நீதிமன்றங்களுக்கும் பின்னர் சுப்ரீம் கோர்ட்டுக்கும் அப்பீல் செய்யலாமென்றும் இக்கமிட்டி யோசனை கூறுகிறது. இதற்கு எவ்வளவு செலவாகும்? ஏழைகள் இவ்விதம் அப்பீல் செய்து நீதி பெறுவது சுலபமா?

இலங்கையரல்லாதாருக்கு காணிகளை விற்பதற்கும் பங்குகளை மாற்றுவதற்கும் பதிவுக் கட்டணமாக நூற்றுக்கு நூறு வசூலிக்க வேண்டுமென்பது புதுவிதி. இலங்கை வம்சாவளியினராக உண்மையாக இருந்தும் அதை சட்டப்படி அத்தாட்சிப்படுத்த முடியாமலிருப்பதால் அதிக கட்டணம் செலுத்தாவிடில் அவற்றைப் பதிவு செய்யவும் மறுக்கின்றனர். இதில் சிறிது சலுகை காட்டி முதலில் பதிவுசெய்து பின்னர் அவசியமாயின அதிகக் கட்டணம் வசூலிக்கலாமென்பது கமிட்டியின் சிபார்சு. இது ஒப்புக் கொள்ளப்பட்டாலும்கூட பிரஜாஉரிமைச் சட்டத்தை அடியோடு திருத்தி அமைக்காவிடில் சம்பந்தப்பட்ட மக்கள் இங்கு நிம்மதியாக சரிசமமாக வாழ முடியாது.

# சோவியத்-இலங்கை பொருளாதார கூட்டுறவு

— வீ. சர்ஜீவ் —

சோவியத்-இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் ஜனவரி 4-ந் திகதி நடந்த பேச்சு வார்த்தைகளின் பலாபலனாக, வீடுகள் நிர்மாணிப்பதற்கு மீள வலியுறுத்தப்பட்ட காங்கிரீட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றைசோவியத் யூனியன் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் அளித்தது. இலங்கையில் ஸ்தாபிக்கப்படும் இத்தொழிற்சாலை சோவியத் மக்களின் அன்பளிப்பாகும்.

இது இருநாடுகளுக்குமிடையில் உள்ள புறவை மேலும் வலுப்படுத்தும்.

இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1963-ம் ஆண்டு சோவியத் விஜயத்தின் போது, மாஸ்கோவுக்கு பக்கத்தில் உள்ள மீளவலியுறுத்தப்பட்ட காங்கிரீட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை தரிசித்தார்.

இதுபோன்ற தொழிற்சாலையொன்றை ஸ்தாபிக்கும்படி சோவியத் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

பாக்டரி பூரணமானதும் வருடத்திற்கு 375,000 சதுர அடி குடியிருப்பு கொருட்கள் உற்பத்தியாகும், வருடம் 5,000 கன மீட்டர் வீடுகட்டும் காங்கிரீட் பொருட்களை சேர்த்து வைக்கக் கூடிய புனைவு முற்றமும் ஸ்தாபிக்கப்படும். பிரதி வருடமும் 1000-க்கு அதிகமான வசதி படைத்த அடுக்குமாடி இல்லங்களை கொழும்புவாசிகள் பெறுவார்கள்.

இலங்கைக்கு சோவியத் யூனியன் வழங்கும் உதவியாவும் அறிந்ததே. 1957 பெப்ரவரி 25-ம் திகதி நிறைவேறிய உடன்படிக்கையின்படி 143,000,000 ரூபாய்களை 2.5% வட்டிக்கு வழங்கியிருக்கிறது.

மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்திட்டம், கனனி கதி நீர் சேமிப்புத் திட்டம், கந்தளாயில கரும்புத் தோட்டத்துக்கான 7000 ஏக்கர் காடு திருத்தும் திட்டம், அம்பாந்தோட்டையில் பருத்திச் செய்கைக்கான 2,000-க்கு அதிகமான ஏக்கர் நிலத்தை தயார் பண்ணும் திட்டம் முதலிய பொறுப்புகளை சோவியத் தரப்பு ஏற்கனவே நிறைவேற்றி விட்டது.

வண்டியில் ஸ்தாபிக்கப்படும் காய்கறி பழங்களை குளிரேற்றி பக்குவப்படுத்தி வைக்கும் ஆலை இவ்வாண்டு பெப்ரவரியில் பூரணமாகும். இலங்கையின் முதல் கனரக தொழிற்துறையைச் சேர்ந்த ஆலையும், டயர் பக்டரியும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இரும்பு உருக்கு ஆலையின் முதல் கட்டம் பூர்த்தியானதும் 3 ஷிப்டுகளில் வேலை நடந்தால் வருடம் 90,000 தொன் ரோல்ட் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். இது இன்று இறக்குமதி செய்யப்படும் உருக்குப் பொருட்களில் பலவற்றை நிறுத்த உதவும். டயர்பாக்டரி வருடம் 350,000 டயர்களையும் டியூப்களையும் உற்பத்தி செய்யும். இது சிலரக டயர்களின் சேவையைபூர்த்தி செய்வதுடன் ஏற்றுமதி செய்யவும் உதவும்.

நிர்மாணிக்கப்படும் மாவு ஆலை வருடம் 70,000 தொன் கோதுமையை பக்குவப்படுத்தும். தானிய பண்டகசாலையில் 20,000 தொன் கோதுமை சேமித்து வைக்க முடியும்.

பொருளாதாரத்தை வளர்த்து வளம் படுத்த பிரயத்தனங்கள் எடுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் வெற்றிகள் கிட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

# பிரதேச பிரஜா உரிமைச் சபைகள் நிறுவப்படவேண்டும்

## விசாரணைக் கமிட்டி சிபார்சு செய்துள்ள சுலபமான மாற்றுவழிகள்

பம்பலப்பிட்டி, வியாழன்

பிரஜா உரிமை கோரி விண்ணப்பம் செய்து அவ்வித விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டவர்கள், அதை எதிர்த்து செய்துள்ள அப்பீலை விசாரிக்க பிரதேச பிரஜா உரிமைச் சபைகள் நிறுவப்படவேண்டுமென வம்சாவளிப் பிரஜைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கு பிரதமரால் சென்ற வருடம் நியமிக்கப்பட்ட கமிட்டி பிரதமருக்கு சமர்ப்பித்துள்ள தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

திரு. டி. சி. ஆர். குணவர்த்தனவைத் தலைவராகக் கொண்டுள்ள இக்கமிட்டியில் திரு. எஸ. சோமசுந்தரம் (திரு. ஈ. ஆர். எஸ. ஆர். குமாரசாமிக்கு பதிலாக நியமிக்கப்பட்டவர்) ஜனாப் எம். எஸ. ஆலிப் ஆகியோர் அங்கத்துவம் வகிக்கிறார்கள்.

வம்சாவளிப் பிரஜை என்பதை ஒருவர் நிரூபிப்பதற்கு தேவைப்படும் தகுதிகளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவை பல ஆயிரக்கணக்கான இலங்கை வாசிகளால் நிரூபிக்க முடியாமலிருக்கும் என கமிட்டி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் ஜனன, மரணப் பதிவு முதல் முதலாக 1897-ம் வருஷத்தில்தான் ஏற்பட்டதென்றாலும் அதன் பின்னர் கூட அநேகர் தமது குழந்தைகளின் ஜனனத்தைப் பதிவு செய்யும் வழக்கம் கொண்டிருக்கவில்லை. அநேக இடங்களில் ஜனனப் பதிவுப் புத்தகங்கள் அழிந்துபோயுமிருக்கின்றன. இந்த நிலையில் ஒருவரது பிரஜாவுரிமையை ருசுப்படுத்த ஜனனப் பதிவு அத்தாட்சியை பெற்றுக் காட்டுவது அனுபவத்தில் சாத்தியமற்றது.

இலங்கையரல்லாதார் ஒருவருடைய பெயருக்கு காணிப் பத்திரங்கள், கம்பனிகளின் பங்குப் பத்திரங்கள் ஆகியவை மாற்றிப் பதிவு செய்யவேண்டுமானால், அப்படிப் பதிவு செய்வதன் முன்னால் நிதிச் சட்டத்தின் 58-வது பிரிவில் கண்ட வரியை (100 க்கு 100 வரி) செலுத்தவேண்டுமென்ற விதி சட்டத்திலிருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

## யாழ்ப்பாண பஸ் நிலையம்

தற்போது யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் அடிக்கடி திருட்டுகள் இடம்பெற்று வருவது பலரறிந்ததே. சிறு குழந்தைகளின் தங்கசாப்புகளை திருடுவதும் பணப்பைகளை களவாடுவதும் இங்கு வழக்கமாக இடம் பெறும் நிகழ்ச்சியாகி விட்டது. இவ்வித திருட்டுகள் அதிகரித்துள்ளதற்குரிய முக்கிய காரணம் பஸ்நிலையச் சீர்கேடென்றே கூறலாம். யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் பிரயாணிகள் தங்கிநிற்பதற்கு போதிய பஸ் தரிப்புக்கள் இல்லை, இரண்டாவது, கியூ முறை அனுசரிக்கப்படுவதே கிடையாது. ஒருபஸ் வந்துவிட்டால் குறிப்பிட்ட பஸ்ஸில் செல்ல விரும்புபவர்களெல்லோருக் ஒரேயடியாக கும்பலாக ஏற விளைவதால் இந்த கும்பலுக்குள் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டுவது அவர்களுக்கு மிக சுலபமாக இருக்கிறது. இவ்வித மோசமான நிலையை மாற்றி பிரயாணிகள் கஷ்டமடையாது பஸ் நிலையப் பொறுப்பாளர்களினதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்புமாகும். இவ்வித நிலை நீடிக்காது தடுக்க உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

—பஸ்பிரயாணி

யாழ்ப்பாணம்.

### ஐயாறன் எழுதுவது

பருத்தித்துறைக்குப் பக்கத்திலே கடலில் அணுசக்தியைப் பயன்படுத்தி ஆழமாக்க இந்தியா கேட்ட அனுமதியை இலங்கை முடியாது என்று மறுத்துவிட்டதாம். அணுசக்தியினால் கதிர் இயக்கம்தோன்றி, வடமாகாண மக்களுக்கும், கடல் தொழிலாளருக்கும், கடல் மீன்களுக்கும் ஏதும் ஆபத்து ஏற்படுமோ என்பதை பரிசீலனை செய்தபின்பே இதற்கு சம்மதமளிக்க முடியுமென்றும் தெரிவித்துள்ளனர்.

சேது சமுத்திரத் திட்டம் இதனால் எவ்வளவு தடைப்படுமோ தெரியவில்லை.

* * *

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலே சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என்று பாடினார் அமரகவி பாரதியார். ஆனால் பாலம் போடுவதற்கு நேர்மாறாக, சேதுவை ஆழமாக்கி விடுவதே சேதுசமுத்திரத் திட்டத்தின் நோக்கம். இதைப்பற்றி பாரதியார் என்ன நினைப்பாரோ!

சேது சமுத்திரத் திட்டத்தினால் இந்தியாவுக்குச் சில நன்மைகள் கிடைப்பினும் இதனால் இலங்கைக்கு பாதகமேற்படலாம். இப்போது இலங்கைத்துறைமுகங்களுக்கு வரும் பெரிய கப்பல்கள் இனி இந்தப் பக்கம் வராமலே போய்விடக் கூடும். கப்பல்கள் வராவிடில், இலங்கையின் வருமானமும் முக்கியமும் குறையவே செய்யும். ஆகவே இந்த சேதுசமுத்திரத் திட்டம் பற்றி இலங்கை அதிக மகிழ்ச்சி கொள்ளமுடியாது.

* * *

இலங்கையின் சம்மதமும் ஒத்துழைப்புமில்லாமல் சேது சமுத்திர திட்டத்தை இந்தியா நிறைவேற்றிவிடவும் கூடும். ஆனால் அது சரியா, நல்லதா? என்பது மிக முக்கிய கேள்வி.

இலங்கை மிகச் சிறிய நாடுதான். என்றாலும் இலங்கைக்குப் பாதகமாக இருக்கக்கூடிய ஒருதிட்டத்தை ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றுவது, இந்தியாவைப்போன்ற ஒரு பெரிய நாட்டின் பெருந்தன்மைக்கு அழகாகாது. இத்தத் திட்டத்தைப்பற்றி இப்போதுதான் முதல் முதலாக இலங்கைக்கு இந்தியா உத்தியோக முறையில் தெரிவிக்கின்றது போலும். எப்படியாயினும் இம் முக்கியவிஷயத்தில் இலங்கையைப் பூரணமாகக் கலந்து அதன் ஒத்துழைப்பையும் பெற்று காரியம் செய்வதுதான் தீர்க்கதரிசனமானதுடன் இரு தேச நல்லுறவுக்கும் நன்மையாகும்.

* * *

இதேசமயம் சிறப்பாக வடமாகாணத்தவருக்கு இதில் அதிக அக்கறையுண்டு. இங்குள்ள துறைமுகங்களை விரிவாக்கி அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று நாம் ஏகோபித்துக்கேட்டும் அதற்கு சம்மதித்தும் இலங்கை அரசாங்கம் இதுவரை எதுவும் செய்யவில்லை. வடக்கே பல துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்வது நாட்டுக்கு நல்லது. என்றாலும் ஒருதுறைமுகத்தையாவது இனி தாமதியாமல் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, முன்காலத்திலிருந்தது போல் யாழ்ப்பாணத்துக்கும், வேதாரண்யம் கோடிக்கரைக்கும் இருந்த வழியை மீண்டும் திறந்துவிட்டு, கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், வீண் சந்தேகங்களையும் பீதிகளையும் விட்டு, இதற்கு ஏற்பாடு செய்வது நாட்டுக்கு நன்மையாவதுடன் வடமாகாண மக்களின் அபிமானத்தையும் ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெறமுடியும். அதுவே வடமாகாணத்துக்கு அரசாங்கம் உண்மை

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

யில் செய்யக்கூடிய நன்மையாகும். இந்திய - இலங்கை நல்லுறவும் பலப்பட்டு சிறப்பாக இலங்கைக்கும் பல நன்மைகள் ஏற்படுவதாகவுமிருக்கும். ஆனால்......!

* * *

நீண்டவர்க்கோர் நெருப்புருவமானார் தாமே நேரிழையை யொருபாகம் வைத்தார் தாமே, பூண்டரவைப் புலித்தோல் மேலார்த்தார் தாமே பொன்னிறத்த வெள்ளச் சடையார்தாமே, ஆண்டுலகேழனைத்தினையும் வைத்தார் தாமே அங்கங்கே சிவமாகி நின்றார்தாமே, பாண்டவரிற் பார்த்தனுக்குப் பரிந்தார் தாமே பழனநகரெம் பிரானார் தாமே.

— அப்பர் சுவாமிகள்

# "வியட்னும் பிரச்னைக்கு சமரச தீர்வு காணுங்கள்"

## அமெரிக்க ஜனதிபதிக்கு யூகோ அதிபர் டிட்டோ செய்தி

### இதுவரை 75,000 வியட்காங் வீரர்கள் கொல்லப்பட்டனராம்

பெல்கிரேட், மார்ச் 4

**வியட்னும் பிரச்னையைத் தீர்க்க சமரசப் பேச்சு நடத்துமாறு யூகோஸ்லேவிய ஜனதிபதி டிட்டோ அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறர்.**

நேற்று ஜனதிபதி ஜோன்ஸன் தனது வெளிநாட்டுமந்திரி ரஸ்க், பாதுகாப்புமந்திரி திரு. மக்னமாரா ஆகியோருடன் வியட்னும் நிலைமைபற்றி ஆலோசனை நடத்தினர். அதே சமயம் அமெரிக்க விமானங்கள் தென்வியட்னுமில் வியட்காங் கொரில்லாக்கள் பகுதியின்மீது நேற்றும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தின.

**19 நாடுகள் கண்டனம்**

மாஸ்கோவில் கூடியுள்ள 19 கம்யூனிஸ்ட் நாடுகளின் மகாநாடு வியட்னுமிலிருந்து அமெரிக்க படைகளை வெளியேறுமாறு கேட்டிருக்கிறது.

**75000 பேர் பலி**

நேற்று அமெரிக்க செனட் கமிட்டி முன் பேசிய அமெரிக்க முப்படைத் தலைவர் ஜெனரல் ஜோன்ஸன் வியட்னும் சண்டையில் இதுவரை 75000 வியட்காங் துருப்புகள் கொல்லப்பட்டதாயும் 400க்கு மேலான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதாயும் கூறினர். ஆனல் தென்வியட்னும் துருப்புகளின் சேதம் பற்றி அவர் குறிப்பிடவில்லை.

வியட்னுமில் அமெரிக்க தாக்குதலை எதிர்த்து ரஷ்யாவில் பல கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கேட்டோ கவுன்சிலும் இது பற்றிவிவாதித்தது கடந்தஞ் கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் நடைபெற்ற சண்டைகளில் 117 வியட்காங்குகள் கொல்லப்பட்டனர் என்றும் 7 பேர் சிறைபிடிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. அரசாங்க தரப்பில் இருவர் கொல்லப்பட்டு 10 பேர் காயமடைந்தனராம்.

**200 டன் குண்டுகள்**

சமீபத்திய தாக்குதலில் சுமார் 200 டன் குண்டுகள் வடவியட்னும் கடற்படைத் தளம்மீது பொழியப்பட்டதாய்க் கூறப்பட்டது. இன்று அமெரிக்க 7-ம் கடற்படையின் ஒருபகுதி தென்வியட்னுமில் இறங்கும் என நம்பப்படுகிறது.

## மேற்கிந்தீஸ் 289 ரன்கள்!

கிங்ஸ்டன், மார்ச். 4

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியக் கோஷ்டிக்குமிடையே நேற்று ஜமாய்க்கா தலைநகர் கிங்ஸ்டனில் ஆரம்பமான முதலாவது கிரிக்கெட்டெஸ்ட் போட்டியில், மேற்கிந்தியக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 289 ரன்கள் எடுத்து அவுட் ஆனது.

ஆஸ்திரேலியா விக்கெட் நஷ்டமின்றி 32 ரன்கள் எடுத்தது.

## ஜெர்மனியில் 55000 பிரி. வீரர்கள்

லண்டன், மார்ச். 4

மேற்கு ஜெர்மனியில் 55000 பிரிட்டிஷ் துருப்புக்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## முதல்வர் மகாநாடு பற்றி அறிக்கை

ஹைதராபாத், மார்ச். 4

மொழிபபிரச்னை சம்பந்தமாக புதுடில்லியில் நடைபெற்ற முதன் மந்திரிகள் மகாநாடு குறித்து, இரு தினங்களில் தாம் அறிக்கை ஒன்றைவிடப் போவதாய் ஆந்திரபிரதேச முதன் மந்திரி திரு. நிஜலிங்கப்பா கூறினர்.

## டில்லியில் ஹரிமன்

புதுடில்லி, மார்ச். 4

ஜனதிபதி ஜோன்ஸனின் விசேஷ தூதர் திரு. ஹரிமன் நேற்று டில்லிவந்தார். பிரதமர், வெளிநாட்டு மந்திரி ஆகியோருடன் அவர் பேச்சுக்கள் நடத்துகிறர்.

## சிக்கிம் மகாராஜா

புதுடில்லி, மார்ச், 4

சிக்கிம் மகாராஜா நேற்று வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ன்சிங்கைச் சந்தித்துப் பேசினர்

## புதிய கட்டிடம

கிளிநொச்சி, வியாழன்

இரணமடு கிழக்கு கூட்டுறவுச் சங்கத்தினுல் 1 லட்சம் ருபா செலவில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை சங்கத் தலைவர் திரு. அ. சிவசுந்தரம் திறந்துவைத்தார்.

இவ்விழாவுக்கு தலைமை தாங்கிய திரு. சிவசுந்தரம் தமது தலைமையுரையில் கூட்டுறவு இயக்கம்பற்றி உரையாற்றினர். திரு. எம். யோகலிங்கம், தலைவர் சிவசுந்தரத்தின் படத்தைதிரைநீக்கம் செய்துவைத்தார். பின்பு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிர்வாகசபையில் காலியான மூன்று இடங்களுக்கும் திருவாளர்கள் கே. சண்முகநாதன், வி. சபாரத்தினம், வி. சத்திவேற்பிள்ளை ஆகிய மூவர் தெரிவுசெய்யப் பட்டனர்.

கூட்டுறவு தலைமை நிலையப் பொறுப்பதிகாரி திரு. சண்முகராசாவும் சமூகமளித்திருந்தார். இறுதியில் திரு. ஏ. ஜி. இராசசூரியர் நன்றி கூறினர்.

## இன்றிரவு கேரளதேர்தல் முடிவு வெளியாகும்

### 133 ஸ்தானங்களுக்கு 558 அபேட்சகர்கள் போட்டி

திருவனந்தபுரம், மார்ச் 4

**கேரளத்தில் இடைக்கால தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று காலை ஆரம்பமாகியது. 85 லட்சம் வாக்காளர்களைக் கொண்ட இந்த ராஜ்யத்தில் 133 சட்டசபை ஸ்தானங்களுக்கு 558 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.**

இவர்களில் 329 பேர் அங்கீகரிக்கப்பட்ட 15 அரசியல் கட்சிகளின் சார்பாக நிற்கும் அபேட்சகர்களாகும். கட்சிரீதியில் போட்டியிடும் ஸ்தானங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| | |
|---|---|
| காங்கிரஸ் | 133 |
| கம்யூனிஸ்ட் | 78 |
| மார்க்ஸிய கம்யூனிஸ்ட் | 73 |
| எஸ். எஸ். பி. | 29. |
| முஸ்லிம்லீக் | 16 |
| சுயேச்சை | 109 |
| அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் | 120 |

ராஜ்யத்தில் மொத்தம் 8300 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றும் எந்த வாக்காளரும் 3 மைல் தூரத்துக்கு மேல் நடந்து செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் அறிவித்தார்.

நாளை இரவு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறினர்.

## "மண்டல சார்பற்ற கொள்கையின் தந்தை நேரு"

### செக். மந்திரி பாராட்டு

புதுடில்லி, மார்ச், 4

இந்தியாவுக்கு விஜயஞ் செய்திருக்கும் செக்கோஸ்லோவேகிய பிரதம மந்திரிக்கு நேற்று செங்கோட்டையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது திரு. சாஸ்திரி பேசுகையில் பிரச்னைகளைத் தீர்க்க ஐ. நா.வையே அணுக வேண்டும் என்றும், ஜெனிவா ஒப்பந்தத்தை கண்டிப்பாகப் பின்பற்றுவதின் மூலமே வியட்னுமில் சண்டை நிறுத்தம் ஏற்படக்கூடும் என்றும் கூறினர்.

செக்கோஸ்லோவேகிய வெளிநாட்டு மந்திரி திரு. டேவிட் ஒரு நிகழ்ச்சியில் பேசியபோது மண்டல சார்பற்ற கொள்கையை உருவாக்கியவர் திரு. நேரு என்றும் இக்கொள்கையின் தந்தை அவர் என்றும், இந்தக் கொள்கை உலகுக்கு பேருதவியாய் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

## குஜராத்தில் பாகிஸ்தான் ஊடுருவி வருகிறது

### உயர் அந்தஸ்தில் பேச்சு நடத்த சுவர்ண்சிங் யோசனை

புதுடில்லி, மார்ச், 4

குஜராத்தில் கட்ச்-சிந்து எல்லைக்குத் தெற்கே பாகிஸ்தான் மேற்கொண்டிருக்கும் ஊடுருவலை இந்தியா தீவிர விஷயமாய்க் கருதுகிறது என வெளிநாட்டு மந்திரி திரு சுவர்ண்சிங் கூறினர்.

குறிப்பிட்ட பகுதியில் நிலத்தில் எல்லைத்தூண்கள் நடப்படவில்லை என்றாலும் எல்லை விஷயம் நன்கு தெரிந்த ஒன்று என்றும் அவர் கூறினர்.

இப்பகுதியிலோ அல்லது நாட்டின் வேறெந்தப் பகுதியிலுமே ஒரு தலைப்பட்சமாக பாகிஸ்தான் எல்லை, உரிமை கொண்டாடுவதை இந்தியா ஒருபோதும் ஏற்காது என்றும், இவ்விஷயத்தில் இரு நாடுகளுக்குமிடையே உயர் அந்தஸ்து பேச்சுவார்த்தை நடத்துவதை ஆதரிப்பதாயும் அவர் கூறினர்'

"சமரசத்திற்கு இசைவில்லாத போக்கை பாகிஸ்தான் கொண்டிருக்கிறது. ஊடுருவலை அது உடன் நிறுத்தும் என நம்புகிறேம்" என்றும் அவர் கூறினர்.

## பறிமுதல் சொத்து வரி பாக்கிக்கு ஈடுபடுத்தப்படும்

### மசோதாவை லோகசபை ஏற்றது

புதுடில்லி, மார்ச் 4

பதுக்கலை வெளிக்கொணர வருமானவரிச் சட்டத்தில் திருத்தம் செய்யும் மசோதா ஒன்றை லோகசபை நேற்று அங்கீகரித்தது.

பறிமுதல் செய்த சொத்துக்களை வரிப்பாக்கிக்குப் பயன்படுத்திக் கொள்ள இந்த மசோதா வழிசெய்கிறது.

சபையின் சகல தரப்பு அங்கத்தினர்களும் இந்த மசோதாவை உற்சாகமாக வரவேற்று நிதிமந்திரி திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் துணிச்சலைப் பாராட்டினர்கள்.

இறுதிவரை 500 திடீர்சோதனைகள் நடைபெற்றிருக்கிறதென்றும் மொத்தம் 5 கோடி ருபாய் கள்ளப்பணம் பிடிபட்டிருக்கிறதென்றும் தொடர்ந்து சோதனைகள் நடைபெறும் என்றும் நிதிமந்திரி அறிவித்தார்.

## காஷ்மீர் பிரச்னையை தீர்க்க உதவி செய்க

### ஆசிய - ஆபிரிக்க நாடுகளுக்கு ஷேக் அப்துல்லா வேண்டுகோள்

கெய்ரோ, மார்ச் 4

காஷ்மீர் விஷயத்தில் ஒரு தீர்ப்பை ஏற்படுத்துவதில் ஆசிய-ஆபிரிக்க நாடுகள் உருப்படியான முறையில் உதவி செய்ய முடியும் என ஷேக் அப்துல்லா இங்கு கூறினர்.

காஷ்மீர் பிரச்னை சிக்கலானதல்ல என்றும் 50 லட்சம் காஷ்மீர் மக்கள் தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ள விரும்புகிறர்கள் என்றும் அவர் கூறினர்.

காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க ஐக்கிய அராபியக் குடியரசு, அல்ஜீரியா போன்ற நாடுகள் தங்கள் செல்வாக்கைப் பிரயோகிக்கவேண்டும் என அவர் கூறினர்.

ஐக்கிய அராபியக் குடியரசு பிரதமர் அலிசாப்ரியையும், அரபு லீக் பொதுக் காரியதரிசியையும் சந்தித்து அவர் காஷ்மீர் நிலைமைபற்றிப் பேசினர்.

அரபு நாடுகளின் தலைநகர்களுக்குத் தாம் விஜயம் செய்து காஷ்மீர் நிலைபற்றி விளக்கப் போவதாய் அவர் கூறினர்.

## இந்திய ஆயுதப்பெருக்கம்பற்றி சீனத்தலைவர்களுடன் அயூப். பேச்சு

பீகிங், மார்ச் 4

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் சீனத் தலைவர்களுடன் நேற்று 3 மணிநேரம் பேச்சு நடத்தினர் இந்தியா ஆயுதபலத்தைப் பெருக்கிவருவது பற்றியும் தென்வியட்னும் பற்றியும் அவர்கள் பேசியதாக அறிவிக்கப்படுகின்றது.

இன்று அயூப்கான் சீனத் தலைவர்களுடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்தினர். பீகிங் ரேடியோவும், சீனப் பத்திரிகைகளும் அயூப்கானின் விஜயம், சீன-பாகிஸ்தான் நட்புறவில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்திருப்பதாக அறிவித்துள்ளன.

அவரது விஜயம் பற்றி பத்திரிகைகள் முதல் பிரபல்யம் கொடுத்துள்ளன.

## சித்திவிநாயகர்

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவங்கள் தொடர்ந்து பத்துத் தினங்களாக நடைபெற்று இன்று நடைபெற்ற தீர்த்தோற்சவத்துடன் இனிது நிறைவெய்தியது.

இவ்வுற்சவத்தையொட்டி நடைபெறும் பிரசித்தி பெற்ற "தெப்போற்சவம்" சில தினங்களில் நடைபெறும்.

## வருடாந்தக்கூட்டம்

கிளிநொச்சி, வியாழன்

ஜெயந்திநகர் பனங்கூட்டுறவுச் சங்க வருடாந்தக் கூட்டம் தலைவர் வ. த. அழகரத்தினம் தலைமையில் சங்க மண்டபத்தில் சென்ற 28-ம் திகதி நடைபெற்றது.

கூட்டுறவின் அவசியம் பற்றி சங்க உப-தலைவர் திரு. வே. கதிரவேலு உரை நிகழ்த்தினர். நிர்வாக சபையில் காலியான அங்கத்தவர்கள் மூவரின் இடத்துக்கு திரு. சி. கந்தசாமி, செ. நடராசா, வ. வேதநாயகம் ஆகிய மூவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# அடம்பன் கொலை வழக்கு: எதிரி விடுதலை

காங்கேசன்துறை, வியா.

அடம்பனைச் சேர்ந்த ஏகரத்தினம என்பவரை இரட்டைக் குழல் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக முத்தையா, முத்து, வேலு ஆகிய மூவர் மீதும் குற்றஞ்சாட்டி மன்னார் கோர்ட்டில் மாஜிஸ்திரேட திரு ஓ. எஸ. எம். செனிவிரத்தின முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் 3 எதிரிகளும விடுதலைசெய்யபட்டுள்ளனர்.

18-9-64 அன்று 4-30 மணியளவில் ஓவசியர் ஏகரத்தினமும் இன்னும் இருவர்களும் மன்னாரைச் சேர்ந்த கல்லாக்காட்டுக்கு கல்வெட்டி எடுக்கும் தொழிலாளர்களுக்கு பணம் கொடுக்கக் காரில் சென்றதாகவும் அங்கு காரை விட்டு இறங்கி நின்றபொழுது முத்து என்பவர் இரட்டைக் குழல் துப்பாக்கியுடன் ஓடி வந்து முத்தையா என்பவரிடம் கொடுத்து சுடும்படி கூறினார் எனவும்முத்தையா உடனே அதே துப்பாக்கியால் ஏகரத்தினத்தைச் சுட்டார் எனவும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய தரப்பில் சாட்சியமளித்தவரின் வாக்கு மூலம் முரண்பாடாகவும் சிருஷ்டிக்கப்பட்டதாகவும் இருப்பதால் இவர்களை கொலைக்குற்றத்துக்காக சுப்ரீம் கோர்ட்டில் பாரப்படுத்த முடியாமல் இருப்பதாக மாஜிஸ்திரேட் வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கையில் தெரிவித்தார்.

எதிரிகள் சார்பில் திரு. வி. ஏ. அழகக்கோனின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு கே. வி. எஸ. சண்முகநாதன் ஆஜரானார்.

## சரசாலையில் வாலிபமுன்னணி

மீசாலை, புதன்

"வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழிகாணாவிட்டால், இன்னும் சில வருடங்களில் கடுமையான பஞசத்திற்குப் பலியாக நேரிடும் ஆதலால் வாலிபர்கள் நன்கு யோசித்து சிறந்த வழியைப் பின்பற்ற வேண்டும்" என்று சரசாலை தமிழ்க்காங்கிரஸ்வாலிப முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சாவகச்சேரித் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தன் பேசும்போது கூறினார்.

திரு. செ. பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு சிவானந்தன் மேலும் பேசியதாவது- எது சிறந்த வழியென்பதை தெரிவு செய்வதற்கு வாலிபர்களுக்கு போதிய அறிவு இருக்கிறது. ஆதலால் அவர்கள் தங்கள் பெற்றோர்களையும் எதிர்காலத்தையும்மனதில் வைத்து, நன்கு யோசித்து சிறந்த வழியைப் பின்பற்ற வேண்டும். கடந்த காலத்தில் வாலிபர்கள் தவறான வழியைப் பின்பற்றியதனால்தான் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பலியாகியுள்ளார்கள்.


உத்தியோகத்தர்கள் தெரிவு வருமாறு- தலைவர் செ. பேரம்பலம், உபதலைவர் ச. நடராசா, இணைச் செயலாளர்கள் திருவாளர்கள் செ. மகேஸ்வரன், க. சுந்தரம், பொருளாளர் திரு. செ. கந்தசாமி, 35 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

REGAL — JAFFNA
NOW SHOWING
ALEX NICOLL
in
GUNFIGHTERS OF CASA GRANDE
(Cinemascope - Metro Color)

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம் போன்: 485
ஹொன்னப்பா பாகவதர்
பி. சரோஜாதேவி
நிரம்பட நடித்த
மஹாகவி காளிதாஸ்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) | விஜயா (மட்டக்களப்பு) | விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (காவலபிட்டி) | மொடேர்ன் (பதுளை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00
ஜெமினி கணேசன் — சாவித்திரி (நடித்த)
கற்பகம்

## தமது காரியாலயத்தை தாமே தாக்கினர்

பேருவலை, வியாழன்

பேருவலை நகரிலுள்ள சமசமாஜக்கட்சிக் காரியாலயம் சென்ற செவ்வாய்க் கிழமை இரவு சுமார் 7-30 மணியளவில் தாக்கப்பட்டது. இதன் காரணமாக காரியாலயத்திலிருந்த அலுமாரிகள், மேசைகள், கதிரைகள் ஆகியனபலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டன.

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த சிலருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தாலேயே இவ்வித விளைவு ஏற்பட்டதாக அறியப் படுகிறது.

இத்தாக்குதல் சம்பந்தமாக பேருவலை பொலிசார் ஒருவரைக்கைது செய்துள்ளனர். நால்வரைத் தேடி வருகின்றனர். இதில் மூவர் சமசமாஜக் கட்சி ஆதரவாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் தினம் விடுமுறை தினம்

### முதலாளிமார் சம்மேளனம் முடிவு

பம்பலப்பிட்டி, வியாழன்

தேர்தல் தினமான மார்ச் 22-ம் திகதியன்று தமது ஸ்தாபனங்களை மூடி, விடுமுறை தினமாக அனுஷ்டிக்க இலங்கை முதலாளிமார் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

மேற்படி சம்மேளனம் தனது அங்கத்துவ ஸ்தாபனங்களுக்கு அனுப்பியுள்ள நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சம்மேளனத்தின் கவுன்சில் தனது அங்கத்தவர்களை தமது ஸ்தாபனங்களைத் தேர்தல் தினத்தன்று மூடிவிடுமாறு சிபார்சு செய்துள்ளது. ஸ்தாபன ஊழியர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளு முகமாக இவ்வித சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதனால் 40,000 ஊழியர்களுக்குமேல் அன்று விடுமுறை தினமாக இருக்கும்.

## வான் மோதி மரணம்

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடிச் சந்தியில் கோபி என்பவரின் சைக்கிள் றிப்பேர்க்கடையில் வேலை செய்யும் வீ. பெர்னாண்டோ (42 வயது) என்பவர் வான் மோதி மரணமானார். பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வந்துகொண்டிருந்த நீர்வேலியைச் சேர்ந்த வானொன்று நெல்லியடிச் சந்தியில் கடைக்கு முன்பாக வந்த இவரை மோதியதாலேயே இம்மரணம் சம்பவித்தது. யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட வீ. பெர்னாண்டோவின் மரணம் பற்றி விசாரணை நடத்திர பின்னர் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்மானிக்கப்பட்டது வான் சாரதியையும் வானையும் பருத்தித்துறைப் பொலிசார் காவலில் வைத்துள்ளனர்.

## அரசாங்கத்தின் புதிய திட்டங்கள்

பம்பலப்பிட்டி, வியாழன்

எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்காக இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுக் கம்பனிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவிருக்கிறது. இதற்கு 10 கோடி ருபாவரை செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

நுவரெலியாவில் ருபா 45 லட்சம் செலவில் குடிநீர் விநியோகத் திட்டத்தையும செயல்படுத்த அரசாங்கம் வெளிநாட்டுக் கம்பனிகளுடன் ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேற்படி திட்டங்களை விரைவில் செயல்படுத்துவதில் அரசாங்கம் அதிக அக்கறை கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

# சுகாதார சேவை ஊழியர் குறைபாடுகள்

## தொழிற்சங்க முயற்சியால் நிவர்த்தி

வவனியா, வெள்ளி

அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கத் தூது குழுவொன்று சமீபத்தில் வவனியா-மன்னார் பகுதிக்கு சுற்றுப் பிரயாணம் செய்து அங்காங்குள்ள அரசாங்க வைத்தியசாலை ஊழியர்களது குறைகளை அவதானித்ததுடன் வவனியா சுகாதார சேவை அத்தியட்சகரின் காரியாலயத்திற்கும் சென்று காரியதரிசி திரு. தியாகராஜாவையும் பேட்டி கண்டது.

பிரஸ்தாப தூது குழுவின் சுற்றுப்பிரயாணத்தால் வவனியா-மன்னார் பகுதி சுகாதார சேவையாளர்களின் வருடாந்த உயர்வுச் சம்பளம் 63/64 க்கான உத்தியோக உடைகள், 5 வருட சேவையாளரின் நிரந்தரம். 3 மாத சம்பள முற்பணம் ஆகிய பல விஷயங்களில் இருந்த இடையூறுகள் நீங்கியுள்ளது.

குழுவின் உபதலைவர் திரு. டபிள்யு. எம். டிங்கிரிபண்டா, நிர்வாகசபை உறுப்பினர்களான திரு. ஏ. பி. ஜி. சோமபாலா, திரு. பி. ஆர். லைமன், வவனியா-மன்னார் பகுதி கிளைச் சங்கச் செயலாளர் திரு. பெருமாள் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித்தனர்.

# "இன்றைய ஆட்சியைவிட யு. என். பி. ஆட்சி மேல்"

## மூதூரில் ஜி. ஜி. பேச்சு

மூதூர், வியாழன்

"தமிழருக்கு சமஷ்டி ஆட்சி உகந்ததாக இருந்தால் இன்று தென் இந்தியா விலேஅண்ணாதுரைதலைமையில் திமுக உருவாகியிருக்காது. மற்றும் இந்தி எதிர்ப்போ, உயிர்த் தியாகமோ நிகழாது இவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்கும் போது நமது இலங்கையிலும் சமஷ்டி ஆட்சி தேவையற்றதாகவே தோன்றுகிறது" என மூதூர் தமிழ்க்காங்கிரஸ அபேட்சகர் திரு. எஸ எஸ ஆறுமுகத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் திரு ஜி ஜி பொன்னம்பலம் கூறினார்.

சமஷ்டியினர் தென்னிலங்கையிலே சமஷ்டி என்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசு என்றும் கூறி மக்களை குழப்பி வருகின்றனர். இது தங்கள் கட்சிப் பலத்தைப் பெருக்கும் தாரக மந்திரமாகும். குறிப்பாகக் கூறினால் நாட்டில் இன்று நிலவி வரும் தனிச்சிங்களச்சட்டம், நாடற்றவர் பிரச்னை, பொருட்கள் விலையேற்றம் போன்றவைகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள் தமிழரசு என்னும் சமஷ்டிவாதிகள் என்றால் அது மிகையாகாது என்றும் திரு பொன்னம்பலம் கூறினார்

1960-ம் ஆண்டு பங்குனி மாதம் தேர்தலில் சமஷ்டி கட்சியினர்தான் ஸ்ரீமாவுக்குச் சாதகமாக வாக்களித்து ஐ தே கட்சியை முறியடித்து ஸ்ரீ ல சு கட்சியை அரசபீடம் ஏறச்செய்தனர்

இந்த ஸ்ரீ ல சு கட்சி அரசாங்கத்தில் நாட்டுமக்கள் அனைவரும் கஷ்டமான வாழ்க்கையையே நடத்துகின்றனர் மிகக் குறைந்த விலையில் கிடைத்த பொருட்களெல்லாம் இன்று மிக விலை கூடியவைகளாக இருக்கின்றன ஐ தே

(5-ம் பக்கம் பார்க்க)

## டட்லி

மூதூர், மார்ச். 5

வருகிற 10-ந் திகதி ஐ. தே. க. தலைவர் திரு. டட்லி சேனநாயகா ஜனாப் பஸீல், ஏ. கபூர், ஜனாப் அமீர் உட்பட பல யு. என். பி. தலைவர்கள் மூதூர் வருவர்.

டயருர்ம்ஸ்

தேவை

கைத்தறி நெசவு ஆசிரியை

மேற்குறிப்பிட்ட பதவிக்கு பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

"டயருர்ம்ஸ்" ஸ்தாபனம், 54, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 8-3-65 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கவும்.

தகைமைகள்

1. நெசவுப் பயிற்சித் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஐந்து வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
   அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

கைத்தறி நெசவாளர்:

இப்பதவிக்குப் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 10-3-65 அன்றோ அல்லது முன்னரோ கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

தகைமைகள்

1. கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. இருவருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
3. வர்ண (Design) வேலையில் தகுதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை (Preference) கொடுக்கப்படும்.

(மேற்குறிப்பிட்ட இரு பதவிகளுக்கும் தங்குவதற்கு இடவசதி செய்து கொடுக்கப்படும்.)

சதிவழக்கு

# இருவர் மீது விசாரணை நடத்த நீதியரசர்கள் குழு நியமனம்

பம்பலப்பிட்டி, வியாழன்

1962-ம் வருடம் ஜனவரி 27-ந் திகதி அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்ததாக சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு பின்னர் நிபந்தனையுடனை மன்னிப்பு வழங்கப்பட்டு முடிக்குரிய சாட்சிகளாக்கப்பட்ட லெப்டினண்ட் கேர்ணல் ஜே. வி. டி. அல்விஸ, லெப்டினண்ட் கேர்ணல் டெனஸை அபயசிங்கா ஆகிய இருவர் மீது அட்டோர்ணி ஜெனரல் டக்ளஸ ஜான்ஸை சுப்ரீம் கோர்ட்டில் புதிதாக தொடர்ந்திருந்த வழக்கை விசாரணை செய்வதற்காக பிரதம நீதியரசர் மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளார்.

நீதியரசர் திரு. ஜி. பி. ஒ. சில்வா (தலைவர்), நீதியரசர் திரு. மாணிக்கவாசகர், நீதியரசர் திரு. அலஸ ஆகியோரே இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளவர்கள்.

கேர்ணல் அல்விஸ, கேணல் அபயசிங்கா ஆகிய இருவரும் பொலிசாரால் கைது செய்யப்படமாட்டார்களென வும் சுப்ரீம்கோர்ட்டில் ஆஜராகுமாறு இவர்களுக்கு விரைவில் கட்டளை பிறப்பிக்கப்படுமெனவும் அறியப்படுகிறது.

இவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்க, மற்றைய சதிவழக்கு எதிரிகளுடன் சேர்ந்து முயற்சித்தார்களென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது,

"தமிழர்-முஸ்லிம்

# மதத்தினுல் வேறுபட்டாலும் மொழியினுல் ஒன்றுபட்டோம்"

## தமிழரசு கூட்டத்தில் இராசதுரை

கல்முனை, வியாழன்

"மார்ச் மாத தேர்தல் தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றது. தமிழர்களும் முஸ்லீம் மக்களும் மதத்தினுல் வேறுபட்டவராயினும் மொழியினுல் ஒன்றுபட்டவர்களே. முஸ்லிம் மக்களுடைய தாய்மொழி தமிழ் மொழியே. இதை எவரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. தமிழ்மொழிக்கு ஆபத்து வரும் வேளையில் தமிழர்களோடுதோளோடு தோள் நின்று போராடும் முஸ்லீம் இனத்தில் ஒருவரை தமிழரசுக்கட்சி கண்டு வேட்பாளராக நியமித்திருக்கின்றது. சாதி சமய வேறுபாடுகட்கு அப்பாற்பட்டது தமிழரசுக் கட்சி என்பதற்கு இது ஒரு போதுமான சாட்சியாகும்.

இவ்வாறு பண்டிருப்பில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சி வேட்பாளர் ஜனுப் மஷூர் மௌலானவை ஆதரித்து மட்டக்களப்பு முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு செ இராசதுரை கூறினர்.

"கடந்த காலங்களில் தமிழரசுக்கட்சி செய்த நன்மைகளை நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளனர். தமிழரசுக் கட்சி ஒன்றினுல் மட்டுமே தமிழர்களுடையபிரச்னையைத் தீர்க்க முடியும் என்பதை எவரும் ஒத்துக்கொள்வர். நாங்கள் தேர்தலைப்பற்றி கவலைகொள்ளவில்லை, நாட்டுமக்கள் எங்கள் மேற் சுமத்திய கடமையை எல்லோரும் கட்டுக்கோப்புடன் இருந்து அரசாங்கத்தையே வீழ்த்தினேம். நாங்கள் அரசாங்கத்தை வீழ்த்தியிருக்காவிடில் தேர்தல் வந்திருக்கவும் மாட்டாது: மற்றவர்கள் தேர்தலிலே போட்டியிடவும் முன்வந்திருக்கமுடியாது. ஆகவேதான் நாங்கள் எல்லோரும் தமிழ்பேசும் இனத்தின் பிரதிநிதிகளாக மீண்டும் பாராளுமன்றம் சென்று எங்கள்மீது தமிழ் பேசும் இனம் சுமத்தியுள்ள பணியை செய்வோம் என்ற திடமுண்டு" என்று தொடர்ந்து கூறினர்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 5-3-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸலாமியநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பக்திப்பாடல்கள், 8-15 இஸலாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 காதலவரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸலிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயாவிருப்பம், 10-00 வீணை இசை, 10-15 தேர்ந்த இசை.

## இன்றைய ;:.

(4-ம் பக்க தொடர்ச்சி)

கட்சி அரசாங்கத்தில் இப்படி நிலை ஏற்பட்டதா? அரசாங்கத்தில் நிதியில்லை பொருளாதாரத் தட்டுப்பாடு, அரசாங்கம் வங்ரோத்தில் ஓடுகின்றது என்றும் கூறினர் தொடர்ந்து உரையாற்றிய உடுப்பிட்டி தமிழ்க்காங்கிரஸ வேட்பாளர் திரு சிவசிதம்பரம் பேசுகையில், 1956-ம் ஆண்டு முதல்கொண்டு இன்றுவரையுள்ள இந்த ஒன்பது ஆண்டுகளில் தமிழரசுக்கட்சி எந்த சாதனையும் புரியவில்லை. மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய ஏதாவது ஒரு சிறு பிரச்னையைக்கூட தீர்த்திதில்லை. தனிச்சிங்களச்சட்டத்தை இலங்கை எங்கும் பரப்ப உதவியது என்ருர்.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீமத் சி. எஸ். எஸ். மணிபாகவரைத் தலைமையாகவுடைய அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப் பிரசாரசபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் சமயப் பிரசங்கங்கள் நடைபெறவிருக்கின்றன.

நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் திரு. த. சுப்பிரமணியம் 'மார்க்கண்டேயர்' என்னும் பொருள் பற்றியும், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி தேவஸ்தானத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் "ஆலயவழிபாடும் அடியார் கடமையும்" என்னும் பொருள் பற்றியும் கதாபிரசங்கள் நிகழ்த்துவர்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் ஸ்ரீமத். சி. எஸ் எஸ். மணிபாகவதரின் "சம்பூர்ண இராமாணத் தொடர் பிரசங்கமும் இன்று நடைபெறும்.

## இலவச வகுப்பு

பளை, புதன்

பச்சிலைப்பளி வண்ணுங்கேணியைச் சேர்ந்த திரு பு. கணபதிப்பிள்ளையின் உதவியுடன் திரு. ஏ பாலசுந்தரம் இலவச விஞ்ஞான வகுப்பு ஆரம்பித்துள்ளார் இவ்வகுப்பு பளை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இவ்வகுப்பை முகமாலை கிராம சபைத்தலைவர் திரு ச சின்னத்துரை ஆரம்பித்துவைத்தார்

# "ஒத்துழைப்பு மூலம் தமிழுக்கு சம அந்தஸ்து"

## ஐக்கிய இடதுசாரி பிரசார கூட்டத்தில் பேச்சு

வல்வெட்டித்துறை, வியா.

பருத்தித்துறைத் தொகுதியில் ஐக்கிய இடதுசாரி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. கு. மோதிலால்நேருவை ஆதரிக்குமுகமாகக் கெருடாவில் வீரபத்திரர்கோவிலுக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. வி. சிவானந்த ஐயர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

உடுப்பிட்டி அபேட்சகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்-சிங்கள மக்களுக்குச் சொந்தமான இந்நாட்டை சோஷலிஸப் பாதையில் ஓர் உன்னத நாடாக்குவதற்காகவே முயன்றுவருகின்றோம். தமிழ் மக்கள் சிங்கள இடதுசாரி மக்களுடன் ஒத்துழைப்பின் மூலம் தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து பெற்றுத்தர உழைத்துவருகிறேம். இன்று பல கட்சிகள் மொழிப்பிரச்னை பற்றிப் பல கருத்துகளையும் உறுதிமொழிகளையும் தெரிவித்து வருகின்றன. ஆனல் இடதுசாரி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் மொழிப் பிரச்னை சொற்ப காலத்துக்குள் தீர்த்து வைக்கப்படுமென்பதைத் திடமாகக் கூற முடியும். இந்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்குச் செல்லும் பணத்தை கூட்டரசாங்கம் தடைசெய்து பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கும் திட்டம் வகுத்துள்ளது".

பருத்தித்துறைத் தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு. மோதிலால்நேரு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"பல வருடங்களாகத் தமிழ் மக்கள் பல தமிழ்பேசும் கட்சிகள் மூலம் இன்னல்களைப் பெற்றுவருகின்றனர். தமிழ் மக்களின் மொழி உரிமைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் காரண கர்த்தாவாக இருந்தவர்கள் முன்னர் சென்ற பாராளுமன்றப் பிரதிநிதிகளே. கூட்டு முன்னணியினுல் தான் நாம் சீரும்சிறப்பும்பெற்று வாழமுடியும், கூட்டரசாங்கம் தமிழ்மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டுவந்த நேரத்தில் அதைத் தமிழ்பேசும் பிரதிநிதிகளும் சேர்ந்து வீழ்த்திவிட்டனர். தமிழ்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகச் சிங்களத் தலைவர்கள் பலர் தமிழ்ப்பகுதிகளில் பல வேலைகளை ஆரம்பிப்பதற்காகப் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தும் வந்தனர். தமிழ்பேசும் மக்களிடையே தீண்டாமையை அகற்றுவதற்காக எங்கள் கட்சி பலவழிகளிலும் ஒத்துழைத்துவந்திருக்கிறது. பாராளுமன்றத்தில் பாட்டாளி மக்களின் குரல் ஒலிக்கவும் ஏழை விவசாயிகளின் பொருளாகிய வெங்காயம் மிளகாய் போன்றவற்றிற்கு உத்தரவாத விலை உயர்வு பெறவும் கடல்தொழிலாளர் சீவல் தொழிலாளர் வாழ்வு வளம்பெறவும் தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தினரின் அட்டகாசத்தை அடக்கவும் தொடர்ந்து போராடிக் கொண்டேவரும், கடந்த 25 வருட காலமாகத்தொழிலாளர் வர்க்கத்திற்காக நாம் பாடுபட்டுவருகிறேம்."

## மகா சிவராத்திரி

பளை, வியாழன்

திங்கள் இரவு சிவராத்திரி விழாவில் தம்பகாமத்தைச் சேர்ந்த நெழியாப் பிள்ளையார் கோவிலில் விசேஷ மேளவாத்தியக் கச்சேரிகள் கூட்டுப்பிரார்த்தனைகள், பஜனைகள் அதிவிமரிசையாகக் நடைபெற்றன. பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

●

உடுப்பிட்டி, வியாழன்

கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் திரு. சி. க. சேந்தனுர் தலைமையில் மகா சிவராத்திரிவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது. நாலு சாமமும் விஷேச அர்ச்சனைகள், அபிஷேகங்கள், புராணபடனங்கள் முதலியன நடைபெற்றன. சிவராத்திரி மகிமை பற்றி ஆசிரியர் ஆர். கே. முருகேசன் சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் எஸ். வேலாயுதம் நந்தனுர், மணிவாசகர், கண்ணப்பா ஆகியோரைப் பற்றிச் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். ஆசிரியர் திரு. கே. க. மாணிக்கம் தேவாரபாராயணம் செய்தார். உயர் திரு. ம. சுப்பிரமணியக்குருக்கள் பிரதம குருக்களாகக் கடமையாற்றினர். விழாவில் கலந்து கொண்ட அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

●

பருத்தித்துறை, வியாழன்

வியாபாரிமூலை இன்பர்சிட்டி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி வைபவம் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பகல் விசேட அபிஷேகம், பூசை ஆகியவற்றுடன் ஆரம்பமான இவ்வைபவத்தை ஒட்டி "ஓடுமறைந்த மாயம்" என்னும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும், "திருநீலகண்ட நாயனர்" சரித சங்கீத கதாப்பிரசங்கமும் இரவு மூன்றரை மணிவரை நடைபெற்றன.

பெருந்தொகையான மக்கள் பக்திசிரத்தையுடன் கூடி விழித்திருந்து விரதம் அனுஷ்டித்துப் பெருமானை வழிபட்டுச் சென்றனர்.

பளை, வியாழன்

முகமாலை கிராமசபைக் கூட்டத்தில், கிராமச் சபை உப தலைவராக திரு. கந்தையா சுந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்னைய உபதலைவர் தனது பதவியை ராஜினமா செய்ததால் புதிய தெரிவு நடைபெற்றது.


விற்பனை

**தென்னந் தோட்டம்**

காணியின் விபரம்:

இடம்: ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நாரந்தனை வடக்கு (பெரியகாடு)

1. செரியல் இல்லாத பங்கு. 13 ஏக்கர் 2 ரூட் 26 போலும்.

2. சொரியல் உள்ளது. 14 ஏக்கர் 1 ரூ. 16 போலின் மூன்றில் ஒரு பங்கான 4 ஏக்கர் 3 ரூட் 5 1/2 போலும். ஆக மொத்தம் 18 ஏக்கர் 1 ரூட் 31 1/2 போல் ஆகும்.

விபரம் அறியும் விலாசம்: நேரிலோ அல்லது கடித மூலமாகவோ திரு. சி. கணபதிப்பிள்ளை, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை. 1650

**விற்பனைக்கு**

நல்ல நிலைமையிலுள்ள 23சிறீ 3436 இலக்க மொரிஸ்வானும்; 33 சிறீ 1591 இலக்க கேம்பிரிட்ஜ் வானும் விற்பனைக்குண்டு. விலாசம் சிங்கர் பேக்கரி, 364, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1762

**S. R. S.**

**ஜவுளி மாளிகையில்**

6 யார், 7 யார் கைத்தறிச் சேலைகள், 100-ம் நம்பர் 120-ம் நம்பர் நூல்களால் எங்கள் சொந்த தறிகளில் தயார் செய்யப்பட்ட நித்தபாவனைக்குகந்த சேலைகள் விற்பனைக்குத் தயாராகவிருக்கிறது.

6 யார், 7 யார் லங்காசேலைகளும்; லங்கா வேட்டி சால்வைகளும் மலிவான விலைகளில் கிடைக்கும்.

சங்கக் கடைகளுக்கும், வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவு உண்டு.

**எஸ். ஆர். செல்லத்துரை**

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 296.


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

மேற்படி சங்கத்தின் வருடாந்தக் கொண்டாட்டம் மார்ச் மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

P. சிவசோதி,
கௌரவ காரியதரிசி.

1651


**தையல் வகுப்பு**

மெசின் தையல் பயிற்சி வகுப்பில் சேர விரும்பும் மாணவிகள் கீழ்கண்ட விலாசத்திற்கு 10-3-65 க்கு முன் விண்ணப்பிக்கவும். விடுதி வசதிகள் அளிக்கப்படும். விபரம் நேரில் செல்வி. ப. இராமலிங்கம், பூதர்மடத்தடி, கோப்பாய் 1753

**விற்பனைக்கு**

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1743

திறமான பச்சைப்பெருமாள் விதைநெல் விற்பனைக்கு இருக்கின்றது. தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். மாப்பியன் இன்டஸ்றீஸ் வேக்ஸ், மாவிட்டபுரம். 1749

B S A. 3.5 H P. மோட்டார் சயிக்கிள் இலக்கம் BN 3525 உடன் விற்பனைக்கு. விலாசம்: S விஜயமூர்த்தி. 43/1 A, கஸ்தூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 1753

முற்றிலும் நல்லநிலைமையிலுள்ள ஈ எல். தொடரிலக்கம் கொண்ட வாக்சோல் வைவேன் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும் டாக்டர் ராஜரத்தினம், வைத்தியசாலை, உடுவில், சுன்னாகம் 1758

**தேவை**

பிடவை வியாபாரத்தில் தேர்ச்சி பெற்ற புசல்மன் தேவை. வயது 20-30 க்குள் விரும்பத்தக்கது. உத்தரவாதத்துடன் 8-3-65 க்கு முன்பாக நேரில் சந்திக்கவும். மைலண்டன், யாழ்ப்பாணம். 1756

எங்களுடைய "டயர்" ஸ்தாபனத்திற்கு தமிழ் ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த ஒரு மனேஜர் தேவை, எட்டாம் திகதிகளுள் நேரில் வந்து சந்திக்கவும், பிணைப்பணம் ரூபா 1500/- கட்டவேண்டும், பைனல் டிரேடிங் ஸ்டோர்ஸ், 103, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 1759

# சேதுசமுத்திர திட்டத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது

## தமிழ்நாட்டு சட்டசபையில் பக்தவத்சலம் அறிவிப்பு

சென்னை, மார்ச் 3

இலங்கையிலிருந்து ஏராளமான தமிழ் மக்கள் தமிழ்நாடு வரவிரும்புவதாகவும் இவர்களுக்கு வேலைவாய்ப்பளித்து அவர்களின் வாழ்வை வளம்படுத்தவேண்டும் என்ற முதல் நோக்குடனேயே சேதுசமுத்திர திட்டம் துரிதப்படுத்தப்படுவதாக இன்று தமிழ்நாட்டு சட்டசபையில் ராஜ்ய முதல் மந்திரி கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களில் பெரும்பாலானோர் இந்தியாவுக்கு வரவிரும்புகிறார்கள் எனவும் இதனுலேயே எல்லோரும் பெருந்தொகையாக ஒரேமுறையில் அவர்கள் இங்கு வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதில் பெரும் கஷ்டங்கள் ஏற்படும் என்பதற்காகவே சாஸ்திரி-சிறீமா ஒப்பந்தத்தில் வருடந்தோறும் ஆயிரக்கணக்கில் அவர்களை வருவிக்க உடன்பட்டதாகவும் திரு. வெங்கட்ராமன் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து வரும் தமிழ் மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் பிரச்னையை தேசியப் பிரச்னையாகக்கருதி தீர்வுகாண மத்திய அரசாங்கம் ஒப்புக்கொள்ளும் எனத் தான் நம்புவதாகவும் சேதுசமுத்திர திட்டத்துக்கு மத்திய அரசாங்கம் முக்கியத்துவம் அளித்துள்ளதெனவும் முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று சட்டசபையில் தெரிவித்தார்.

---

### கள்ளநோட்டு அரசாங்கம் மறுப்பு

பம்பலப்பிட்டி, புதன்

சீனுவில் அச்சிடப்பட்ட போலி பத்து ரூபா நோட்டுக்கள் புழக்கத்தில் உள்ளதாக பத்திரிகை (ஈழநாடு அல்ல) ஒன்றில் வெளிவந்த செய்தியில் எவ்வித உண்மையுமில்லை என பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ள நோட்டுக்கள் பற்றி விசாரணை நடத்தும் உரிமை இரகசியப் பொலிஸ் பகுதியில் உள்ள இதற்கான பிரத்தியேக பிரிவுக்குத்தான் உண்டு என்றும், பொலிஸாருக்கு கள்ள நோட்டுக்கள் பற்றிய தகவல் கிடைத்தால் அதுபற்றி பொலிசார் குறிப்பிட்ட பிரத்தியேக இரகசிய பொலிஸ் பிரிவுக்கு தெரிவிக்கவேண்டும் என சட்டம் உள்ளதாகவும் ஆனால் இதுவரை இப்பிரிவுக்கு இலங்கைக்கு வெளியே அச்சிடப்பட்டதாக கருதப்படும் கள்ள நோட்டுப் பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்றும் எனவேகுறிப்பிட்டபத்திரிகைச் செய்தி பிழையானது எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

---

### அபேட்சகரின் உறுதி

காங்கேசன்துறை, வியாழன்

வெங்காயம்முதலிய பொருட்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லத் தடையாக இருக்கும்ஆணை பிறவுத்தடையை நீங்கியும் உத்தரவாத விலையை உயர்த்தித் தருவதாகவும் பருத்தித்துறைத் தொகுதியில் இடதுசாரி ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும் திரு மோதிலால் நேரு கூறினார். அவர் மேலும் பேசுகையில், 18 வயது வாலிபர்களுக்கு வாக்குரிமை பெற்றுக்கொடுக்க வாதாடியதும் இடதுசாரியினர்தான் என்றும் கூறினார்;

கூட்டத்திற்கு திரு. வி சிவானந்த ஐயர் தலைமைதாங்கினார். திருவாளர்கள் ஆர். ஆர். தருமரத்தினம், கோ. கருணாகரராஜா, ஈஸ்வரலிங்கம் உட்பட பலர் பேசினர்.

---

### சுவாமி சச்சிதானந்தரின் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், வியா.

யோகிராஜ் சச்சிதானந்தஜீ இம்மாதம் 10-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவிருக்கிருர். அவர் இங்கு 16-ம் திகதி வரை தங்கியிருப்பார் இங்கு தங்கியிருக்கும் நாட்களில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் மாலை 5மணியிலிருந்து 6 மணிவரை ராஜ யோக வகுப்புக்கள் நடத்துவார். அவர் வைமன் வீதியிலுள்ள 'அருளக'த்தில் தங்கியிருப்பார்.

---

### "தொழிற்சாலை உடன் வேண்டும்"

உடுப்பிட்டி, புதன்

கண்ணாடித் தொழிற்சாலை, கும்புத்தொழிற்சாலை, தீப்பெட்டி-சவக்காரத் தொழிற்சாலைகள் முதலிய 12 கைத்தொழிற்சாலைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் எவையேனும் சிலவற்றை உடனடியாக நிறுவுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்று கோரும் மகஜரொன்றை அகில இலங்கை வேலைவேண்டுவோர் கழகம் கைத்தொழில் மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ளது இம்மகஜரில் வடமராட்சிப் பகுதியில் வசிக்கும் ஆயிரம் பேர் கையெழுத்திட்டுள்ளனர், இக்கோரிக்கை சம்பந்தமாக சமீபத்தில் யாழ்ப்பாணம் வரவிருக்கும் நிதிய மைச்சர் டாக்டர் என் எம் பெரேராவுடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

---

தமிழ்நாட்டு

### சட்டசபையில் உரிமைப் பிரச்னை

சென்னை, மார்ச் 3

தமிழ்நாடு சட்டசபையில் சென்ற திங்கட்கிழமை நடந்த ஒரு விவகாரம் பற்றி தமிழ் தினசரிப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்த செய்தியில் சட்டசபையை அவமதிப்பதாக உள்ளதாகவும் அதை உரிமைக்கமிட்டி விசாரிக்க வேண்டுமென்று முதன் மந்திரி கொண்டுவந்த பிரேரணை நிறைவேறியது.

சபையில் நடப்பவற்றை வெளியிடப் பத்திரிகைகளுக்கு உரிமை உண்டென்றும் அதில் தவறில்லை எனவும் எதிர்க்கட்சியினர் விவாதித்தனர். எனினும் வாக்கெடுப்பின் போது முதன் மந்திரியின பிரேரணை வெற்றியடைந்தது.

சபையில் நடந்த விஷயம் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தது குறித்தும் முதன் மந்திரி உரிமைப் பிரச்னை கிளப்பினர். சபையைப் பற்றிய விவகாரங்களை சபையில் தெரிவித்திருக்கலாம் என அவர் குறிப்பிட்டார், சபாநாயகர் இது குறித்து நாளை தனது கருத்தைத் தெரிவிப்பார்.

---

### வானொலி உபநிலையம்

பம்பலப்பிட்டி, புதன்

அனுராதபுரத்தில் நிறுவப்பட்ட இலங்கை வானொலியின் உப நிலையம் இன்று செயல்பட ஆரம்பித்தது.

---

### "தமிழர்களை காப்பாற்றினேன்"

பளை, வியாழன்

"ஈழம் மேற்கே முனீஸ்வரத்தையும் தெற்கே கதிர்காமத்தையும் எல்லையாகக் கொண்டுளது. இதன் கண்ணே எமது தமிழ்மொழி பிறந்து வளர்ந்து வருகின்றது. இதை அழியாது நிலைபெற்று வாழவைப்பது எமது கடமையாகும்.

கடந்த சில காலங்களாக இலங்கையில் மொழிப்பிரச்னை தலைதூக்கி தாண்டவமாடி வருகிறது. 1958-ல் மொழி இனக் கிளர்ச்சியால் சுமார் ஆயிரத்து அறுநூறு பேர் இறந்து விட்டனர். எஞ்சியோரில் 600 பேரை நான் தென் இலங்கையில் இருந்து வட பகுதிக்கு கொண்டுவந்து விட்டேன். இவ்வித உதவிகளை செய்ததன் பயனுக தமிழர் சமுதாயம் பிழைத்தது"

இவ்வாறு பளை சந்தை மைதானத்தில் ஈழத்தமிழர் முன்னணிக் கட்சி வேட்டாளர் திரு. செ. சரவணமுத்துவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் கட்சித் தலைவர் திரு. சுந்தரலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்ற நாலரை வருடங்களாக நடைபெற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின அரசாங்கத்தில் பொருளாதாரம் மிகத் தட்டுப்பாடான நிலைமைக்கு வந்துவிட்டது; இதில் தமிழர் நிலைமையே வருந்தத்தக்கது. இதை நீக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்

கிளிநொச்சித் தொகுதி அபேட்சகர் திரு. செ. சரவணமுத்துவும் சொற்பொழிவாற்றினர்.

---

### பிரதேச . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கப்படவேண்டும், உரிமை மாற்றப் பதிவுக்கு முன்னதாக வரி செலுத்தவேண்டுமென்ற நிபந்தனையில்லாமல் சட்டப்படி வசூலிக்கவேண்டிய வரியை, இதர வரிகளை வசூலிப்பது போல பிறகு வசூலிக்கலாம்.

ஜனனப் பதிவுப் புத்தகங்களைப் பாதுகாக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்;

பிரஜாவுரிமை மறுக்க நியாயமான வேறு காரணங்கள் இல்லாதவரை ஜனனப் பதிவுப் பத்திரத்திலோ, அல்லது 15-11-1948 க்கு முன்னால் தயாரிக்கப்பட்ட வேறு எந்த தஸ்தாவேஜுக்களிலோ கீழ்க்கண்டவிதமாக ஒருவரின் பெயர் குறிப்பிட்டிருந்தால் அவரை இலங்கைப் பிரஜையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சிங்களவர், இலங்கைத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், வவனியா-முல்லைத் தீவு தமிழர், திருக்கோணமலைத் தமிழர், இலங்கைச் சோனகர், சோனகர், மரைக்காயர், மலாய்க்காரர், பறங்கியர், புரேஷியர், கொழும்புச் செட்டி, முக்குவர், மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த பறவர், வேடுவர்.

ஒவ்வொரு பகுதி காரியாதிகாரியும் மனுதாரர்களை விசாரித்து அவருடைய பிரஜா உரிமை சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரம் வழங்க அதி

---

# "2வருடத்தில் தமிழர் உரிமையை பெற்றுத் தருவோம்"

## தமிழ் காங்கிரஸ் பிரசாரகூட்டம்

மீசாலை, வியாழன்

151 பேர் கொண்ட பாராளுமன்றத்தில், 20 பேர்சென்று சமஷ்டி அரசியலைப் பெற்றுவிட முடியுமா? கடந்த எட்டு வருடகாலத்தில், எந்த சிங்களக் கட்சியாவது அல்லது தனிப்பட்ட சிங்கள மக்களாவது சமஷ்டி அரசியலை ஆதரிக்கவில்லை. தமிழ் மக்களிலேயே பலர் சமஷ்டி அரசியலை ஆதரிக்காத போது மேடைகளிலே மட்டும் இரவல் பெயரான 'தமிழரசு' என்று முழங்குவதால் நமது உரிமை கிடைத்துவிடாது.

மந்துவில் ஒட்டை வெளி மைதானத்தில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் சாவகச்சேரித் தொகுதி தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. மு சுந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவானந்தன் மேலும் கூறியதாவது: தமிழ் காங்கிரஸ் அன்றும், இன்றும் என்றும் சம- அந்தஸ்திற்காகவே பாடுபட்டுவருகிறது. 1944-ம் ஆண்டு மே மாதம் சட்டசபையில், நாடெங்கும் தமிழுக்கும் சம-அந்தஸ்து என்ற தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. அன்றுமுதல் 1956-ம் ஆண்டு மார்ச் மாதம்வரை இலங்கை முழுவதும் சம-அந்தஸ்து இருந்து வந்ததென்பதை சமஷ்டிக் கட்சியினர் மறுக்க முடியாது. சமஷ்டிக்கட்சியினர் பெரும்பான்மைபாக பாராளுமன்றக் சென்ற பொழுதுதான் தனிச் சிங்களச் சட்டம் வந்தது. தமிழ் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருந்த காலத்தில் தமிழுக்கும் சம-அந்தஸ்து இருந்தது. தமிழ்க் காங்கிரஸ் கொள்கையான சம அந்தஸ்தை, கம்யூனிஸ்ட், சம சமாஜக்கட்சியினரும், வேறுபல அபேட்சை அங்கத்தவர்களும் ஆதரித்து வருகின்றனர்.

வட்டுக்கோட்டை தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம் வே. சுப்பிரமணியம பேசும்போது கூறியதாவது:-

சமஷ்டி அரசியலை எத்தனை வருட காலத்தில் பெற்றுத் தருவோம் என்று இதுவரை சமஷ்டிக்கட்சியினர் கூறவில்லை ஏனென்றால் அது பெற முடியாத காரியம் என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். ஆனல் தமிழ்க்காங்கிரஸ் 2 வருட அவகாசமே கேட்கின்றது. இரண்டு வருடத்தில் உரிமை பெற்றுத் தராவிட்டால் சமஷ்டி கட்சியினரைப் போல மீண்டும் உங்களிடம் வாக்குக் கேட்க வரமாட்டோம்.

கோப்பாய் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. சி குணரத்தினம் பேசும்போது கூறியதாவது:-

தமிழ் மொழியின் உரிமையை இம்முறை நாங்கள் பெறுவிட்டால் எதிர்காலத்தில் இந்நாட்டில் தமிழினம் முற்ருக அழிந்து விடும், சென்ற இரு தடவை விட்ட பிழைகளை இம்முறையும் விட்டால், இலங்கை முழுவதும் சிங்கள நாடாகிவிடும் பயனற்ற இயக்கங்களினால் நமது உரிமைகளைப் பெற்றுவிட முடியாது.

திருவாளர்கள்: என். தம்பு, ஆ. தில்லைநாதன் செல்லையா, புரட்சி மயில்வாகனம், பழமுதிர்சோலையான், செல்வி ஜெயமணி சின்னத்துரை மற்றும் பலர் பேசினர்கள்.

---

காரம் அளிக்கவேண்டும்,

காலக்கிரமத்தில் பிரஜாவுரிமைச் சட்டம் முழுவதையுமே புனராலோசனை செய்ய ஒரு பார்லிமெண்டரி பொறுக்குக் கமிட்டி நியமிக்கப்படவேண்டும்.

---

### 'தொழிலாளருக்கு உதவ யு. என். பி. முன்வரும்'

பம்பலப்பிட்டி, வியாழன்

'அடுத்த யு என். பி. அரசாங்கம் தொழிலாளவர்க்கத்தினருக்கு உதவும் முகமாக புதிய திட்டங்களை வகுக்கும்' என கொச்சிக்கடையில் நடைபெற்ற யு. என். பி. தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு ஆனந்த திஸ டி' அல்விஸ் தெரிவித்தார்.

கொழும்பு மத்திய தொகுதியில் யு. என். பி. சார்பில் திரு. ஆர் பிரேமதாசாவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

தொழிலாளர்கள் தமக்கென சொந்தமாக வீடுகளை வைத்திருக்கக் கூடிய வழிவகைகளையும் யு. என். பி. மேற்கொள்ளுமென்றும் திரு அல்விஸ் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

---

### குழந்தையை கொல்ல 2 தடவை முயன்ருர்

### தாயை அங்கொடைக்கு அனுப்ப உத்தரவு

குருநாகலை, வியாழன்

புனிஹண்டா என்ற பதினெரு வார வயதுடைய குழந்தை தனது தாயார் சோமவதியினுல் கொலை செய்யப்படவிருந்த இரு சந்தர்ப்பங்களில் உயிர் தப்பிக்கொண்டது, அச்சிசுவைத் தாய் பிறந்தவுடன் கொல்ல முயற்சித்தார் இரண்டாம் தடவை சிறையிலிருக்கும் போதும் தாய் அச்சிசுவைக் கொல்ல எத்தனித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு குருநாகல் மாஜிஸ்திரேட் திரு. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மாஜிஸ்திரேட் அக்குழந்தை பாணந்துறையில் உள்ள பிரஜாபதி குழந்தைகள் விடுதிக்கு அனுப்பி வைக்கும் படியும் தாயை அங்கொடைக்கும் அனுப்பி வைக்கும்படியும் உத்தரவிட்டார்,

---

### குழந்தைகள் இயக்கும் டெலிவிஷன் நிலையம்

ஹனேவர், மார்ச் 4

மேற்கு ஜெர்மனியிலுள்ள ஏராளமான பாடசாலைகளில் பாடபோதனைக்கு டெலிவிஷனை வெற்றிகரமாகப் பயன்படுத்தி வருகிருர்கள். ஆனல், ஹனேவரிலுள்ள ஒரு பாடசாலையில் டெலிவிஷன் நிலையத்தைப் பள்ளிக் குழந்தைகளே இயக்குகிருர்கள். ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் மாணவர்களே காமிராவைக் கையாளுகிருர்கள். மற்றத் தொலை[illegible]டக் கருவிகளையும் அவர்களே இயக்குகிருர்கள். இதன் மூலம் டெலிவிஷன் பற்றிய தொழில் நுட்பங்களிலும் அவர்களுக்குப் பயிற்சி கிடைக்கிறது. மற்ற நகரங்களிலுள்ள ஆசிரியர்கள் இங்கு வந்து மாணவர்கள் இயக்கும் டெலிவிஷனைப் பார்த்துச் செல்கிருர்கள்.

---

### தபாற்கந்தோர்களுக்கு சவர்க்காரம்

பம்பலப்பிட்டி, வியாழன்

காசநோயாளருக்கு அலவன்சுகள் வழங்கும் சகல தபாற்கந்தோர்களுக்கும் கிருமிகளை அழிக்கும் சவர்க்காரத்தை வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுளது. இந்தத் தபாற்கந்தோர்களில் காசநோய் கிருமிகள் பரவாமல் தடுக்கவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.